செ.வெ.எண்: 513 நாள்: 16.08.2020

# தமிழகம் முழுவதும் 2.78 லட்சம் பேர் கொரோனா நோய் தொற்றில் இருந்து முழுவதுமாக குணமடைந்துள்ளனர்.

## மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் தகவல்

---

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் இன்று (16.08.2020) புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை கூட்ட அரங்கில் சுகாதாரத்துறை அரசு முதன்மைச் செயலர் டாக்டர்.ஜெ.ராதாகிருஷ்ணன் இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் கோவிட் நோய் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தலுக்கிணங்க தமிழகம் முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வரும் கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து தொடர்ந்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதேபோன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும் தமிழகம் முழுவதும் மாவட்டங்களுக்கு நேரடியாக சென்று தொடர் ஆய்வு மேற்கொண்டு வருகிறார்கள். அந்தவகையில் இன்றையதினம் புதுக்கோட்டை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அரசு அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

தமிழகம் முழுவதும் 2,78,270 பேர் கொரோனா நோய் தொற்றில் இருந்து முழுவதுமாக குணமடைந்துள்ளனர். இந்தியாவிலேயே அதிகபட்சமாக தமிழகத்தில் இதுவரை 36,40,796 நபர்களுக்கு கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.தமிழகத்தில் கொரோனா நோயிற்கு சிகிச்சை அளிக்கும் வகையில் 1.29 லட்சம் படுக்கை வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் இதுவரை 2,754 நபர்கள் கொரோனா நோய் தொற்றில் இருந்து முழுவதுமாக குணமடைந்துள்ளனர். இதில் 124 கர்ப்பிணி பெண்களும், 17 சிறுநீரக நோயாளிகளும் முழுவதுமாக குணப்படுத்தப்பட்டுள்ளனர். மேலும் புதுக்கோட்டை மாவட்டத்தில் கொரோனா

நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் வகையில் புதுக்கோட்டை இராணியார் மருத்துவமனை, பழைய அரசு தலைமை மருத்துவமனை போன்றவை செயல்பட்டு வருவதுடன், புதிதாக 100 படுக்கைகள் கொண்ட சித்த மருத்துவமனை மற்றும் புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரியில் 25 கோடி மதிப்பீட்டில் 300 படுக்கைகள் கொண்ட கோவிட் சிறப்பு சிகிச்சை மையமும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதேபோன்று தாலுகா மற்றும் தாலுகா அல்லாத மருத்துவமனைகளிலும் கொரோனா சிகிச்சை மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. கொரோனா நோய் தொற்றை தடுக்கும் வகையில் பொதுமக்கள் அனைவரும் கட்டாயம் முகக்கவசம் அணிவதுடன், சமூக இடைவெளியையும் கடைப்பிடிக்க வேண்டும். உடல்சோர்வு, காய்ச்சல், நுகர்வு தன்மை இழப்பு போன்ற அறிகுறி தென்பட்டவுடன், உடனடியாக அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வர வேண்டும். ஆரம்ப நிலையிலேயே வருவதன் மூலம் கொரோனா நோய் தொற்றில் இருந்து பொதுமக்களை விரைவாக குணப்படுத்தலாம்.

மேலும் கொரோனாவை கட்டுப்படுத்த அரசு கூறும் வழிமுறைகளை பொதுமக்கள் தவறாது பின்பற்றி கொரோனா நோய் தொற்றில் இருந்து தங்களை பாதுகாத்து கொள்ள வேண்டும். கொரோனா நோய் பரவலை கட்டுப்படுத்தும் வகையில் மாவட்டம் முழுவதும் பல்வேறு பகுதிகளில் தொடர்ந்து மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. எனவே பொதுமக்கள் அனைவரும் அரசின் நடவடிக்கைக்கு முழு ஒத்துழைப்பு நல்க வேண்டும். புதிதாக கொரோனா நோயிற்கு சிகிச்சை அளிக்கும் வகையில் மருத்துவர்கள், செவிலியர்கள், லேப்டெக்னிசியன்கள் போன்றவர்கள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

தமிழகம் முழுவதும் கொரோனாவால் பாதிக்கப்பட்டு பூரண குணமடைந்து வீடு திரும்பியவர்களுக்கு மீண்டும் கொரோனா தொற்று வராமல் கண்காணிக்கும் வகையில் தமிழகத்தில் உள்ள அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளில் தனிப்பிரிவு ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இதனை தொடர்ந்து மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள 300 படுக்கைகள் கொண்ட கொரோனா சிறப்பு சிகிச்சை ஒப்புயர்வு மையம் மற்றும் புதுக்கோட்டை மன்னர் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள கோவிட் கவனிப்பு மையத்தையும் பார்வையிட்டு, அங்கு நோயாளிகளுக்கு வழங்கப்படும் உணவின் தரத்தினை ஆய்வு செய்தார்கள்.

---------------------------------------------------------------------------------------------

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**